**செ.வெ.எண்-09** **நாள்-07.04.2018**

# அரியலூர் மாவட்டத்தில் வேளாண்மைத்துறையின் சார்பில் ரூ.52 இலட்சத்து 77 ஆயிரத்து 981 மதிப்பீட்டில் வேளாண் இயந்திரங்கள் வழங்கப்பட்டது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வேளாண்மைத்துறையின் சார்பில் வேளாண் உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.52 இலட்சத்து 77 ஆயிரத்து 981 மதிப்பில் 22 வேளாண் இயந்திரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் மற்றும் வேளாண்மைத்துறை இயக்குநர் **திரு.வ.தட்சனாமூர்த்தி, இஆப.,** அவர்கள் ஆகியோர்கள் தலைமையில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், அரியலூர் மாவட்டத்திற்குட்பட்ட 6 ஊராட்சி ஒன்றியங்களில் வேளாண்மைத்துறையின் சார்பில் கூட்டுப்பண்ணையம் திட்டத்தின்கீழ் 9 விவசாய உற்பத்தியாளர் குழுக்களுக்கு சுமார் ரூ.5 இலட்சம் மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் வாங்குவதற்காக மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்விவசாய உற்பத்தி குழுக்களுக்கு 3 டிராக்டர், 1 மினி டிராக்டர், 5 சுழற்கழப்பை, 13 பவர் டில்லர் என 22 வேளாண் இயந்திரங்கள் ரூ.52 இலட்சத்து 77 ஆயிரத்து 981 மதிப்பீட்டில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை ஜி.கே.லோகேஷ்வரி, துணை இயக்குநர் (வேளாண்) பழனிசாமி, துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) அன்புராஜன், வேளாண் அலுவலர் வடிவேல் மற்றும் அலுவலர்கள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**